**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 10.11.2020 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 7828/E/2019**

திரு.V.பாக்கியராஜ் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர் வட்டம்,
சென்னை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 02.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 11.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 05.08.2019 |

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) பிற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.V.பாக்கியராஜ் அவர்கள் தனது சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால்,

இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ராமன், பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், அம்பத்தூர் வட்டம், சென்னை மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 02.05.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரின் கடிதம் நாள்.14.03.2018, 02.04.2018 மற்றும் 26.03.2019 ஆகிய நினைவூட்டு கடிதத்தின் தொடர்ச்சியாக மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட வேண்டிய முதல்வரின் சாலை விபத்து நிவாரண தொகை ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம்) - க்கான காசோலையை மீள புதுப்பித்து தரும்படி சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அனுப்பிய மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் உள்ளிட்ட தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர், சார் ஆட்சியர் அலுவலகம், ஜக்காம்பேட்டை, திண்டிவனம் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 04.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / சார் ஆட்சியர், சார் ஆட்சியர் அலுவலகம், ஜக்காம்பேட்டை, திண்டிவனம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 07.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை 15 தினங்களுக்குள் வழங்குவதாக தொலைபேசி வாயிலாக வாக்குமூலமாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் 02.05.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 02.05.2019 தேதியிட்ட மனுவிற்கு உரிய காலத்தில்**

முறையான தகவலை வழங்காததற்கு அன்றைய தேதியில் பொறுப்பிலிருந்த சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் ஏன் அதிகபட்ச அபராதம் விதிக்கலாகாது என்பதற்கும், சட்டப்பிரிவு 20(2)-ன்கீழ் துறைரீதியான நடவடிக்கைக்கு உயரதிகாரிகளுக்கு ஏன் பரிந்துரைக்கக்கூடாது என்பதற்கும் உரிய விளக்கத்தைப் பெற்று, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.

3. மேல்முறையீட்டாளருக்கு உரிய காலத்தில் முறையான தகவலை வழங்காது, மேல்முறையீட்டாளரை அலைக்கழிப்பு செய்ததற்காக, இழப்பீடாகத் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(8)(b)-ன்கீழ் ரூ.3,000/- (ரூபாய் மூவாயிரம் மட்டும்)-ஐ மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.

ஒம்/- ச.செல்வராஜ்
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப்பதிவாளர்.

**<u>வழக்கு எண்.SA 7828/E/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர் வட்டம்,
சென்னை மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு.V.பாக்கியராஜ்,
எண்.145, தெற்கு தெரு,
தரிகொம்பன்,
N.அண்டக்குடி அஞ்சல்,
இளையான்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

Copy to: Judgement File.
*"VP / PA -12.11.2020"*